[1994 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 395, திரு. ஆர்.பி. பரமசிவம் மற்றும் டாக்டர் வெ. புருஷோத்தமன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

395---

ஒகேனக்கல் முதலைப் பண்ணையின் கழிவுநீர் ஆற்று நீரில் கலப்பதைத் தடுத்தல்.

***24893**-திரு. ஆர். பி. பரமசிவம்: **டாக்டர் வெ. புருஷேத்தமன்:**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்: கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஒகேனக்கல்லில் உள்ள "முதலைப் பண்ணையின்" கழிவு நீர் ஆற்று நீரில் கலப்பதால் சுற்றுச் சூழ்நிலை பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அக்கழிவு நீர் ஆற்றில் கலக்காமல் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஒகேனக்கல்லில் அமைந்துள்ள முதலைப் பண்ணையிலிருந்து காவிரி ஆற்றில் வெளியேற்றப்படும் கழிவுநீர் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவுகளுக்குட்பட்டு இருப்பதால் சுற்றுச் சூழல் பாதிக்க வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் ஒரு சுற்றுலா மையமாக இருந்து வருகிறது. அங்கே பலதரப்பட்ட மக்கள் சென்று, அந்தச் சூழ்நிலையை அனுபவித்து வருகிறார்கள். அந்த நிலையில், அங்கே இருக்கிற முதலைப் பண்ணையிலிருந்து வெளியேற்றப்படுகிற கழிவுநீர், காவிரி ஆற்றில் கலப்பதால், அங்கு மீன்கள் இறக்க நேரிடுகிறது என்று மீன் பிடிப்பவர்கள் சொல்கிறார்கள். அதேநேரத்தில், அங்கு குளிப்பவர்களும் ஒருவிதமான நாற்றம் ஏற்படுகிறது என்று சொல்லுகிறார்கள். குடிநீருக்குப் பயனற்ற வகையில் ஒருவித துர்நாற்றம் இருப்பதாக, அங்கே அதைப் பயன்படுத்துகிற பொதுமக்களும் கூறுகிறார்கள். ஆகவே, இந்தச் சூழ்நிலையில், அந்த முதலைப் பண்ணையிலிருந்து வெளியேற்றப்படுகிற கழிவுநீரை சுத்தப்படுத்தி, ஆற்றில் கலக்க வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

GISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலைப் பண்ணையின் கழிவு நீரின் மாதிரி 12.2.1994 அன்று எடுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. அதில் மாசுக் கட்டுபாட்டு வாரியம் நிர்ணயித்துள்ள தர நிர்ணய அளவிற்கு உட்பட்டு, இருந்த காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல அங்கே சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்பட்டு மீன்களுக்கோ மற்றவர்களுக்கோ ஆபத்து இல்லை என்பதை மாசுக் கட்டுபாட்டு வாரியம் தெரிவித்திருக்கிற காரணத்தால் உங்களுடைய கேள்விக்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல்லில் வனத் துறைக்குச் சம்பந்தமான முதலைப் பண்ணை ஒன்றுள்ளது. அங்கே சுமார் 2 ஆயிரம் வயது முதிர்ந்த முதலைகள் இருக்கின்றன, நாள் ஒன்றுக்கு மாட்டு இறைச்சி அதாவது தினசரி 4 அல்லது 5 மாடுகள் அங்கே தேவைப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் கோழி இறைச்சி மற்றும் மீன், இறைச்சி எல்லாம் அந்த முதலைகளுக்குத் தேவைப்படுகிறது. முதலைகள் உணவு உட்கொண்டது போக மீதமுள்ள அனைத்தும் கழிவுகளாக தினசரி காவிரி ஆற்றிலே கலக்கப்படுகிறது. ஒசூரிலுள்ள மாசுக் கட்டுபாட்டு அதிகாரிகள் அங்கு எந்தவிதமான திட்டமும் அரசுக்கு தெரியப்படுத்தவில்லையென்று நான் அறிகிறேன். ஆகவே, இந்த வயது முதிர்ந்த முதலைகளை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு வனத் துறையிடம் கலந்தாலோசித்து, மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலமாக, அந்த நதி நீர் மக்களுக்குப் பயன்படும் வகையிலே நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலைகளுக்கு உணவு மாட்டு இறைச்சி, கோழி இறைச்சி, ஆட்டு இறைச்சி என்று கால்நடை மருத்துவராக இருக்கிற டாக்டர் புருஷோத்தமன் சொல்லித்தான் தெரிய வேண்டிய அவசியமில்லை. முதலைகளைப் பொறுத்தமட்டில், வயதான முதலைகள் ஆனாலும், இளமையான முதலைகள் ஆனாலும் அந்த உணவைத்தான் உட்கொண்டு வருகின்றன. தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தாலுகா, ஒகேனக்கல் கூத்தப்பாடி கிராமத்தில் 0.40 எக்டேர் பரப்பில் முதலை மறுசீரமைப்பு மையம் அமைக்கப்பட்டு, வனத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. கற்சுவர்களால் ஆன 18 தனித்தனியான அடைப்புகளில் இந்த முதலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. முதலைகள் சுற்றி வருவதற்கு ஏற்றவாறு வெற்றிடமும், தண்ணீர் பரப்பிடமும் இந்த அடைப்புகளில் உள்ளன.

அந்தப் பண்ணைக்குத் தேவைப்படும் தண்ணீர் காவிரியிலிருந்து நேரிடையாக குழாய் மூலம் எடுக்கப்படுகிறது. ஒவ்வொரு அடைப்புகளில் உள்ள தொட்டியில் தண்ணீர் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை மாற்றப்படுகிறது. இவ்வாறு பண்ணையில் பயன்படுத்தப்பட்டத் தண்ணீர் அருகிலுள்ள ஒடை வழியாக இறுதியில் காவிரி ஆற்றில் அதன் நீரோட்டத்திற்கு மேற்பரப்பில் கலக்கிறது. இவ்வாறு வெளியே வரும் கழிவு நீரானது *30* மீட்டர் தூரம் ஒடை வழியாக சென்று காவிரியை அடைகிறது. *12.2.1994* அன்று மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் எடுக்கப்பட்ட மாதிரி பகுப்பாய்வு செய்யப்பட்டதில், இது மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினுடைய தர நிர்ணய அளவிற்குட்பட்டு இருக்கிற காரணத்தால் இதில் மாசு ஏற்படவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று மீண்டும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தைக் கேட்டு, மீண்டும் ஒரு முறை பகுப்பாய்வு செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *396*, திரு பி.வி. இராஜேந்திரன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

396--

மருதுபாண்டியர்கள் நினைவு நாளில் ஆண்டு தோறும் விழா கொண்டாடுதல்

25943--*திரு. **பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு வீரமரணம் எய்திய மருதுபாண்டியர்கள் நினைவு நாளில் (அக்டோபர் *24*) ஆண்டுதோறும் விழா கொண்டாடிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐரோப்பாவில் பிரன்ச் புரட்சி நடந்தவுடன் அச்செய்தியைக் கேட்டு இந்தியாவிலும், தென் மாநிலங்களில் Peninsula Confederation என்கிற விடுதலை வேட்கை உடைய ஒரு கூட்டமைப்பை, மருது பாண்டியர்கள் தலைமையில், கோபால் நாயக், கானிஜாகான், கேரளவர்மா, கிருஷ்ணப்ப நாயக் இவர்கள் எலலாம் சேர்ந்து உருவாக்கி மிகப்பெரிய விடுதலைப் போரை, First war of Independence *1799*-ல் வீரபாண்டிய கட்டபொம்மன், *1800*-ல் மருதுபாண்டிய சகோதரர்கள்